Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953,

விரோதிஞு (1889) ஆணி மீ, 28உ ஆரப்மானது.

இந்து சாதனம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எடு] யாழ்ப்பாணம்:- சோபகிருதுஞு மார்கழிமீ டுஉ வெள்ளிக்கிழமை (20 December. 1963) [ஆலஉஅ]

இந்திய அறிஞர்களும் ஈழத்து அறிஞர்களும் பிரசங்கமாரி

23, 24, 25-ம் திகதிகளில் அ. இ. சைவமகாநாடு

—யாழ்ப்பாணம்.

ஈழம்வாழ் சைவமக்களே ஆன்ம சிந்தனையில் ஈடுபடுத்தவும் ஆன்ம லாபங் கருதித் தாழாது உளுற்றும் சன்மார்க்கத்தில் வழி திருப்பிவிடவும், பேரிதும் பயன்படும் மகாநாடாக, தெய்வ சிந்தையிற் கலந்து தம்மிதயங்களே இறைவன் குடிகொள்ளும் ஏற்றம் மிகு கோயில்களாக மாற்றிக்கொண்டு பேரானந்த நிலையில் மூழ்கி நிற்கும் தவசீலர்களின் உள்ளங்களிகொள்ளும் திருவிழாவாக அமையவேண்டுமென்ற பெருநோக்குடன் சைவபரிபாலன சபையினர் ஆண்டுதோறும் பெரும் முயற்சியால் பெரும் செலவில் நடத்திவரும **அகில இலங்கைச் சைவமகாநாட்டின்** இவ்வாண்டுக்குரிய விழாவின் நிகழ்ச்சிகள் பின்வருமாறு:-

சோபகிருது ஞு மார்கழி மீ அ உ (23—12—63) திங்கட்கிழமை

தலைவர்

ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசகஞானதேசிக சுவாமிகள்

சிவராஜயோகமடம் திருவெண்காடு

9-00—10-00 வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோயிலில் வழிபாடு.

மேற்படி கோயிலிலிருந்து கே. கே. எஸ். வீதிவழி சபை நாவலர் மண்டபம்வரை ஊர்வலம்.

10-00—10-30 கடவுளாராதனை, திருவெம்பாவையோதல்

10-30—11-00 உபநிஷத் சாந்திமங்களபாடம்

பிரம்மஸ்ரீ தி. கி. சீதாராம சாஸ்திரியவர்கள்

11-00—11-30 வரவேற்புப்பா, வரவேற்புரை

திரு. மு. மயில்வாகனம் அவர்கள்

11-30—12-00 தலைவர் முன்னுரை

12-00—12-45 திருவாசகமும் மணிவாசகரும்

ஸ்ரீமதி புலவர் C. குழந்தையம்மாள் அவர்கள்

நிர்மலாக் கல்லூரி, கோவை.

பிற்பகல்

3-00—3-45 அன்பில் விளைந்த இன்புடைக் கனி

பண்டிதர் பிரம்மஸ்ரீ வ. மு. இரத்தினேசுவரஐயர் அவர்கள்

3-45—4-30 சிவனை நினைக்கும் தவம்

திரு. S. நமசிவாயம்பிள்ளை அவர்கள்

(உடுப்பிட்டிமகளிர் கல்லூரி)

4-30—5-15 'திருமுறைகளும் சித்தாந்தமும்'

வித்துவான் திரு. க. கி. நடராஜன் B. O. L. அவர்கள்

5-15—6-00 தலைவர் குறிப்புரை

தமிழ்மறையோதல் கடவுள் வழிபாடு

சோபகிருது ஞு மார்கழி மீ கூ உ (24—12—63) செவ்வாய்க்கிழமை

தலைவர்

ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசகஞானதேசிக சுவாமிகள்

9-30—9-40 கடவுளாராதனை, திருவெம்பாவையோதல்

9-40—10-25 சேக்கிழாரும் பெண்மையும்

புலவர் ஸ்ரீமதி சி. குழந்தையம்மாள் அவர்கள்

நிர்மலாக்கல்லூரி, கோவை.

10-25—11-10 'சைவமும் மகளிரும்'

தலைவர் அவர்கள்

11-10—11-20 தமிழ்மறையோதல்

11-20—12-05 முருகன் பெருமை

திரு. த. முத்துச்சாமிப்பிள்ளை அவர்கள்

யாழ். சைவபரிபாலனசபைத் தலைவர்

(தொடர்ச்சி 4 - ம் பக்கம்)

நற் சிந்தனை

அறவோ ரெனப்படுவா
ராரென்ருல் வையத்
துறவோரே யாமென்று
சொல்

திருவாசக விழா

ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்ட ஆதரவில் 21-12-63 சனிக்கிழமை முதல் 30-12-63 திங்கட்கிழமை வரையுள்ள திருவெம்பாவைத் திருநாட்களில் திருக்கேதீச்சரம் திருவாசக மடத்தில் சாதனையும் திருவாசக விழாவும் நடைபெறும். தமிழ் சைவ அறிஞர்கள் இந்தப்பத்துத் தினங்களும் ஏராளமாகக் கலந்துகொண்டு பிரசங்கங்கள், கூட்டு வழிபாடுகள் நடாத்துவார்கள்.

திருவெம்பாவை

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை நாவலர் மண்டபத்தில் 21-12-63 சனிக்கிழமை தொடக்கம் 30-12-63 திங்கட்கிழமைவரை தினமும் காலை 8 மணியளவில் திருவெம்பாவை ஓதுதலும் இரவு 7 மணியளவில் திருவாதவூரடிகள் புராணப்படிப்பும் நடைபெறும்.

திருக்கேதீச்சரத்தில் உழவாரத் தொண்டு

மார்கழித் திங்கள் 6-ம்நாள் (21-12-63) தொடக்கம் 15ம் நாள் (30-12-63) வரை திருவெம்பாவை நாட்களாகும். இந்நாட்களில் திருக்கேதீச்சரத்தில் திருவாசக விழா வொன்று சிறப்பாக நடத்த முயற்சிகள் நடைபெறுகின்றன. இந்நாட்களில் சிரமதான இயக்கமொன்றையும் திருக்கேதீச்சரத்தில் நடாத்த கொழும்பு இந்துவாலிபர் சங்கம் தீர்மானித்திருக்கிறது. சிரமதானம் மூலம் இங்கு செய்யவிருக்கும் பணிகளில் முக்கியமானது கோவிலைச் சுற்றிக் காடுபோல் வளர்ந்திருக்கும் எருக்கஞ்செடிகளையும் மற்றும் சிறு செடிகள், பூண்டுகள் ஆகியவற்றையும் ஒழிப்பதே. இப்பணியில் பாலர் முதல் வயோதிபர் வரை, ஆண், பெண் இருபாலாரும் பங்குபற்ற முடியும் என்பது மட்டுமல்ல சகலரும் பங்குபற்ற வேண்டுமென்பதே மேற்படி சங்கத்தின் விருப்பம்.

சமூக நலன் கருதிப் பணி பாற்றும் ஒரேய இந்துச் சங்

ஆதியு மந்தமு மில்லா அரும்பெருஞு
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின்மே னின்றும புரண்டிங்ஙன்
ஏதேனு மாகாள் தடந்தாளென் னேயென்னே
ஈதே யெந்தோழி பரிசேலோ ரெம்பாவாய்.

நேயர்கள் நெஞ்சம்

கதிரைமலைக்கோவையில் காணக்கிடக்கும் பிழைகள்

மேற்படி கோவையைப் பாடி முடித்தவர், எங்கள் மதிப்புக்குரிய கலித்துறையரசு, கச்சாய்ச் சின்னையாப் புலவர் ஆவர். மக்கள் முக்குண வயப்பட்டிருத்தலாலே எழுத்திலும் பிழைவிடுவது இயற்கை. ஆனால் அப்பிழைகளைத் திருத்துவித்து அச்சிடுவதேமுறைமை. புலவருடைய பாடல்களிலே பிழைகள் நுழைந்துவிட்டதை அறிந்தயான், அவற்றைத் தகுதிவாய்ந்த பண்டிதர்களிடங் காட்டித் திருத்திச் செப்பஞ் செய்து, அச்சிடுவிக்குமாறு பலமுறை பணிந்து வேண்டினேன். அங்ஙனம் வேண்டியது, தமிழ்த்தாய் மேல் வைத்த பற்றினாலேயாம். இக்காலத்திலே இலக்கண விதிகளைக் கைவிட்டுப் பாடும் புதிய கவிஞர்களைப் போலச் சின்னையாப் புலவரும் இலக்கண விதிகளைக் கைவிடாது பேணிப் பாட வேண்டும் என்ற பெரு விருப்பம் எனக்கு இருந்ததைப் புலவர் அறிவார். அதனை அவர் மறக்கவும் மாட்டார்; அன்றி மறுக்கவும் மாட்டார்.

'நெற்றிக் கண்ணைக் காட்டினும் பாட்டுக் குற்றமே குற்றம்' என்று வழக்குரைத்தார் நக்கீரர். ஏன் அப்படிச் செய்தார்? பொருள் மரபைப் பாதுகாத்தற் பொருட்டேயாம். அதுபோல இக்கோவையிலே பலவகைப்பட்ட வழுக்கள்உண்டென்றும், அவைகளைத் திருத்தாமல் அச்சிட்டு வெளியிடுதல் பெருங் குற்றமென்றும், புலவரை நான் பணிந்து வேண்டினேன், அவர் என் மொழிகளைக் கேட்டிலர். நான் அதனை வஞ்சகமாகக் கூறவில்லை; பொருமையினாற் கூறவில்லை. புலவரிலே எனக்கு ஈடுபாடு மிகுதியும் உண்டு. தமிழ்ப்பற்றினாலேயே கூறினேனென்று மீட்டுங் கூறுகின்றேன். தமிழைக்காப்பது தாயைக் காப்பதற்குச் சமமாகும், என்மேல் யாருங் குறைவிளங்கார்.

கதிரைமலைக்கோவையில் அமைந்துகிடக்கும் பிழைகளை ஐந்துவகைப்படுத்தலாம். அவையாவன:-

1. யாப்பிலக்கணத்துக்கு முரண்பாடானவை.
2. சொல்லிலக்கணத்துக்கு அமையாதவை.
3. பொருளிலக்கணத்துக்கு அமையாதவை.
4. கோவைக்குரிய சிறப்பியல்புகள் அமையாதவை.
5. அச்சுப்பிழைகள் வரம்பின்றிக் கிடத்தல்.

இவைகளை முறையே ஆராய்ந்து உண்மையை உலகுக்குக் காட்டி, தமிழ்க் கவி மரபைப் பாதுகாப்பதே என் கடனுகும். ஐந்து வகைப் பிழையுள் முதலாவதாக நிறுத்தப்பட்ட மாப்பிலக்கணத்துக்கு முரண்பட்ட நிறத்தை இங்கே ஆராய்வாம்.

த. சுப்பிரமணியம்
கண்டி வீதி,
கொடிகாமம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

சோபகிருது ஹூ மார்கழிமீ
ருஉ வெள்ளிக்கிழமை

மார்கழி மாநாடுகள்

என்றும்போல எங்கள் சைவ பரிபாலன சபையாரின் ஆண்டு மாநாடு வருகிற திங்கட்கிழமை தொடங்கிப் புதன்கிழமைவரையும் சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நிகழ்வதற்கு இறைவன் இன்னருளைக் கொண்டு உரிய ஒழுங்குகள் நடைபெற்று வருகின்றன. சாதனையுடன் போதனையும் ஒருங்கு அமைதல் சமய வளர்ச்சிக்கு வேண்டப் பெறுவதென்று நாவலர் நற்றகையார் செயலாற்றி வந்த மரபு வழியே சபையாரும் சைவப்பணி ஆற்றி வருகின்றனர். அக்காலத்தில் எவ்வாறு நாவலர் அவர்கள் தென்னிந்தியத் தமிழகத்திற் சென்று சைவப்பிரசாரம் செய்து ஈழத்துக்கும் பாரதத்துக்குமுரிய மத மொழித் தொடர்பை நிலை நாட்டினரோ அவ்வாறே இக்காலத்திலே இந்தியத்தமிழகத்திலிருந்து பல பேரறிஞர்கள் இங்கு வந்த அரிய சொற்பெருக்காற்றி மகிழ்விக்கின்றனர்.

மாநாடுகள் மக்களுக்கு வழிகாட்டிகளாய் அமைந்தால் உண்மையிற் சமய ஒழுக்கம் நன்கு வளரும். சைவ நூற் றுணிபுள்ள அறிஞர்கள் ஆற்றும் உபதேசம் வாழ்க்கைக்கு இன்றியமையாத ஊன்றுகோலாக உதவும். "சொற் பொருள் உணர்த்துஞ் சொல் வன்மையும் கற்போர் நெஞ்சங் காமுறப் படுதலும் இன்னோரன்ன தொன்னெறி மரபினர்" ஆகும் பேச்சாளர்களைக் கேட்குந்தோறும் 'சொல்லிய பொருளைச் சொல்லியாங்குணரும்" வல்லமை அவையுளார்க் குண்டாகும் எனவே சைவமாநாட்டின் அருமையை யாமறிந்து அதைப் பயன்படுத்துவோமாக.

தேவாரப் புகழ் பெற்றதும் இப்பொழுது இலங்கையின் சைவ சின்னமாகப் புனருத்தாரணம் செய்யப்பெற்றுத் திகழ்வதும் ஆகும் திருக்கேதீச்சரத் திலே திருவாசக மாநாடும் வேறு பல இடங்களில் இவை போன்ற சைவக் கலைவிழாக்களும் மார்கழித் திங்களின் மகத்துவத்தை விளக்கும் வண்ணம் நடைபெறவிருக்கின்றன. விநாயக விரதம் திருவாதிரைத் திருநாள் முதலிய புண்ணிய நாட்களும் மாநாடுகளும் பொலிந்து விளங்கும் மார்கழி நிகழ்ச்சிகள் மக்களுக்குப் பயன்பெற அமைய இறைவன் இன்னருள் வேண்டி நிற்போமாக.

உலகெங்கும் தமிழ் முழங்கும் உலகத் தமிழ் மன்றம்

அகில மலாயாத்தமிழர்சங்க கோலாலம்பூர் கிளையும் இலங்கை தமிழர் சங்கமும் சேர்ந்து நடத்திய இந்த மன்ற அமைப்புக் கூட்டத்திற்கு மலாயாவின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் திரளான தமிழன்பர்கள வருகை வந்திருந்தனர்.

உலகத் தமிழ் மன்றத்தின் தலைவராக மலாயா பல்கலைக் கழக இந்திய மொழித்துறையின் விரிவுரையாளரும் இலங்கைத் தமிழ் எழுத்தாளர் மன்றத் தலைவருமான பண்டிதர் கா. பொ. இரத்தினம் ஏகமனதாய்த் தேர்ந்தெடுக்கப்பட்டார். துணைத் தலைவராக அகில மலாயா தமிழர் சங்க கோலாலம்பூர் துணைத்தலைவர் திரு. ஏ. ஏ. அப்துல்லாவும், பொதுச் செயலாளராக மலாயாத் தமிழர் எழுத்தாளர் சங்கத் தலைவரும் தமிழ்நேசன் ஆசிரியருமான முருகு சுப்பிரமணியனும், துணைச் செயலாளராக மலாயா தமிழ் எழுத்தாளர் சங்கச் செயலாளர் திரு. எம். துரைராஜும், கிளைச்செயலாளராக தமிழ் எழுத்தாளர் சங்க துணைத் தலைவர் திரு. சி. வி. குப்புசாமியும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மற்றும் பொருளாளராக திரு. தா. குமாரசாமியும், துணைப் பொருளாளராக திரு ஜி. டி. முத்தையாவும் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், செயற்குழுவுக்கு 20 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

மன்றக் காப்பாளர்களாக பல நாடுகளின் தமிழறிஞர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

உலகத் தமிழ்மன்ற அமைப்புக்கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்று உரையாற்றிய திரு. ஏ. ஏ. அப்துல்லா தமிழர்கள் தங்களின் மொழியையும் கலையையும் வளர்க்க உலக அடிப்படையில் மன்றம் அமைப்பது மிகச் சிறந்த செயலாகும் என்று கூறினார். உலகிலுள்ள தமிழர் இயக்கங்கள் யாவும் மன்றத்திற்கு பேராதரவு தரவேண்டும் என அவர் அறைகூவல் விடுத்தார்.

அமைப்புக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி உரையாற்றிய திரு. இராமநாதன், உலகத் தமிழ் மன்றத்தை உருவாக்குவதற்கு மலேசியாவே பொருத்தமான இடம் என்பதற்குப் பல நல்ல காரணங்கள் உண்டு என்று கூறினர்.

அடுத்து மன்றத்தின் நோக்கங்களை விவரித்த பண்டிதர் இரத்தினம் கடந்த 8 ஆண்டுகளாக மன்றம் நிறுவ மேற்கொண்ட முயற்சிகளை விவரித்தார்.

இத்தகைய மன்றத்தை மலேசியாவில் நிறுவ வேண்டிய ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைத்திருப்பது உலகத் தமிழ்மன்றம் ஆக்கப் பணிபுரிய முடியும் என்பதற்கான நல்ல அறிகுறியாகும் என்று தெரிவித்தார்.

'லண்டனில் தமிழுக்கு மணிமண்டபம் நிறுவ முயன்றோம். ஆனால் கோலாலம்பூரில் தமிழர்களுக்காக விரைவிலேயே மணிமண்டபம் எழும்பும் என நம்புவோம். இந்நாட்டில் திறமையுடனும், மக்களின் பேராதரவுடனும் சிறந்த முறையில் ஆட்சி செலுத்தும் கூட்டணி அரசாங்கம் உலகத் தமிழ் மன்றத்துக்குத் தேவைப்படும உதவிகளைச் செய்வார்கள் என்று நம்புகிறோம். தேசிய மொழிப்பற்றுக்கோ நாட்டுப் பற்றுக்கோ இம்மன்றம் மாறுபாடுடையதல்ல. மேலும் தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும் மொழி அடிப்படையில் ஒன்றுபடுவது, அவரவர் வாழும் நாட்டிடம் கொண்டுள்ள விசுவாசத்திற்கு எவ்வகையிலும் குறைவை ஏற்படுத்தாது என்று திரு இரத்தினம் தமது உரையில் எடுத்துரைத்தார்.

அடுத்து உரை நிகழ்த்திய திரு. முருகு சுப்பிரமணியன் இத்தகைய மன்றத்தை உலகத் தமிழர்கள் அவர்கள் எங்கு வாழ்ந்தாலும் வாழ்த்தி வரவேற்பது திண்ணம் என்று கூறினர்.

திரு. கா. பொ. இரத்தினின் பல்லாண்டுகால அயராமுயற்சிக்குப் பின்னர் உலகத் தமிழ் மன்றம் அமைப்பு இந்நாட்டில் கிறைவேறுகிறது. இம்மன்றம் எல்லா நாடுகளிலும் அரசியல் சார்பற்ற பணிகளிலேயே ஈடுபடும். இம்மன்றத்தின் பணி, இந்நாட்டு விசுவாசத்திற்கும், தேசிய மொழிப் பற்றுக்கும் எவ்வகையிலும் பாதிப்பை ஏற்படுத்தாது' என்றார்.

அடுத்து உரையாற்றிய மலாயா பல்கலைக் கழக இந்திய மொழித்துறைப் பேராசிரியர் தவத்திரு தனிநாயக அடிகளார், தமிழின் எதிர்காலம் மங்கிவிடுமோ என்று சிலர் ஐயுற்றிருக்கும் இவ்வேளையில் இந்த மன்றம் தோன்றிச் செயல்படுவது புதிய உணர்ச்சியையும், நம்பிக்கையையும் உண்டாக்கு மென்று தெரிவித்தார்.

தமிழர் வாழும் நாடுகளுக்குத் தூதுசென்று மன்றத்தின் லட்சியங்களை நிலைநாட்டப் பாடுபடல் வேண்டும் என தனிநாயக அடிகளார் அறைகூவல் விடுத்தார்.

'உலகத் தமிழ் மன்றம் உலகில் எல்லாப் பகுதிகளிலும் செயல்படும் தமிழர் மன்றங்களுடனும் இதர பெரிய மன்றங்களுடனும், அறிஞர்களுடனும் தொடர்பு கொண்டு செயலாற்றவேண்டும்.

'உலகில் ஆங்கிலம் பேசும் மக்கள் தங்களுக்கென அனைத்துலக மன்றம் ஒன்றை நிறுவி மொழி யுணர்வையும், கலை உணர்வையும் வளர்த்து வருகின்றனர் மேலும் பிரான்ஸ் ஜெர்மன் போன்ற நாட்டினரும் இதுபோன்று உலக அடிப்படையில் மன்றம் அமைத்துக் கொண்டிருக்கின்றனர்' என்று சுட்டிக் காட்டினர்.

இம்மன்றத்திற்குத் தாமும் தமது தொடர்புடைய கழகங்களும் முழுஉதவிகளும், ஆதரவும் நல்குவதாகத் தனிநாயக அடிகளார் உறுதி கூறினர்

சொற்பொழிவுகளுக்குப் பின்னர், 'உலகமெங்கும் வாழும் தமிழர்களுடன் தொடர்பு கொண்டு தமிழ் மொழியின் ஆக்கத்துக்கும், தமிழ்க் கலைகளின் வளத்துக்கும், தமிழினத்தின் உயர்ச்சிக்கும் உலக ஒற்றுமைக்கும் உழைப்பதற்கு உலகத் தமிழ் மன்றத்தை (INTERNATIONAL TAMIL LEAGUE) அமைக்க வேண்டுமென இப் பேரவை முடிவு செய்கிறது' என்னும் தீர்மானத்தை அவையினர் யாவரும் ஏற்றுக்கொண்டனர். பின்னர் உலகத் தமிழ் மன்ற அமைப்பு விதிகள் ஆராய்ந்து ஒப்புக்கொள்ளப்பட்டன.

அமைப்பு விதிகளின்படி அமைப்புக் கூட்டத்துக்குச் சமுகமளித்தவர்கள் யாவரையும் தொடக்க உறுப்பினராக்கொண்டு மன்ற அலுவலர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

உலகத் தமிழ் மன்றம்,
51, வெலட் வீதி,
கோலாலம்பூர், மலேசியா,

வில்லூன்றி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம்

இலட்சார்ச்சனை

இவ்வாலயத்தில் கடந்த ஐந்து வருட காலமாகத் தொடர்பாக நடைபெற்று வரும் இலட்சார்ச்சனை வைபவமானது இவ்வருடமும் சென்ற 1-12-63 ல் (விநாயக விரத ஆரம்ப தினத்தன்று) ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. தினமும் காலையில் ஆயிரமும், மாலையில் இரண்டாயிரமுமாக, மூவாயிரம் அர்ச்சனைகள் நடைபெறுகின்றன. இவ்வர்ச்சனை 3-1-64 வெள்ளிக்கிழமை பூர்த்தியாகலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

விநாயக சஷ்டி

கடந்த 1-12-63 ல் ஆரம்பமான விநாயக விரதம் 21-12-63 ல் விநாயக சஷ்டியுடன் பூர்த்தியாகின்றது. அன்று மாலை 5 மணியளவில் பெருங்கதைப் படிப்பும், பின் அபிஷேகமும் உற்சவமும் நடைபெறும்.

திருவெம்பாவை

இவ்வாலயத்தில் இவ்வருடமும் வழமைபோலத் திருவெம்பாவைப் பூசைகள் 21-12-63 ல் ஆரம்பமாகி நடைபெறும். அதிகாலையில் திருவெம்பாவைப் பூசையும், பின் திருவாதவூரடிகள் புராணப் படிப்பும் நடைபெறும். 30-12-63 அதிகாலையில் திருவாதிரை அபிஷேகமும், பின் திருவெம்பாவைப் பூசையும், அதன்பின் திருவாதவூரடிகள் புராணப்படிப்புப் பூர்த்தியும் நடைபெறும்.

யாழ். சைவ பரிபாலன சபை நடத்தும் பரீட்சைகள்

பரீட்சை விதிகளும் பாட விதானமும்

சைவப் புலவர் பரீட்சை:

பரீட்சை விதிகள்:

1. பரீட்சைத் திட்டம்

(அ) யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையால் நடத்தப்படும் பரீட்சைகள் இளஞ் சைவப் புலவர், சைவப் புலவர் என இரு வகைப்படும். ஒவ்வொரு பரீட்சைக்கும் ஆறு பாடவகைகள் உள.

(ஆ) பரீட்சைக்குத் தோன்றுபவர்கள் ஒவ்வொரு பரீட்சைக் குமுரிய ஆறு பாடவகைகளிலும் சித்தி பெறுதல் வேண்டும்.

(இ) சைவப்புலவர் பரீட்சைக்குரிய பாடவகைகளிற் சித்தியெய்தியவர்கள் யோக்கியதாபத்திரம் பெறுவதற்கு ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையிலுஞ் சித்தியெய்தல் வேண்டும். அக் கட்டுரையைப் பரீட்சைச் சபையாரே நியமிக்கப்படும் இருவர் மதிப்பிடுவார்கள். விஷயம் உட்பிரிவுகள் உப உட்பிரிவுகள் என்பனவற்றைப்பற்றிய விபரங்கள் பரீட்சைச்சபையுடன் தொடர்புகொண்டு அறிந்துகொள்ள வேண்டும். பரீட்சைச் சபையின் அனுமதி பெற்ற பின்பே கட்டுரை எழுதுதல் வேண்டும். எழுதிய பின் கட்டுரை சபைக்குரியது. சபையின் அனுமதியின்றிப் பிரசுரம் செய்யப்படாது. இக் கட்டுரையில் சிறந்தனவென்று மதிக்கப்படுவன சபைக்குரிய இந்துசாதனப் பத்திரிகைகளில பிரசுரிக்கப்படும். கட்டுரை தமிழில் அல்லது ஆங்கிலத்தில் எழுதலாம். கட்டுரையை மதிப்பிடுபவர்கள் கட்டுரையாளரை நேரிலழைத்து விசாரணை செய்ய உரிமையுடையர்.

(ஈ) சித்தி ஒவ்வொரு பாடவகையிலும் நூற்றுக்கு 33 வீதத்துக்குக் குறையாமற் புள்ளிகள் பெற்று மொத்தத்தில் 60 வீதத்துக்குக் குறையாமற் புள்ளிகள் பெறுவோர் முதற்பிரிவிலும் 40 வீதத்துக்குக் குறையாமற் பெறுவோர் இரண்டாம் பிரிவிலும் சித்தியடைவர்.

3. நூனசித்தி: ஏதாவது ஒரு பாடவகையிற் சித்தியெய்தாது, சித்திக்குவேண்டிய மொத்த வீதம் பெறுபவர்க்கு நூனசித்தி வழங்கப்படும். நூனசித்தி பெறுபவர்கள் சித்தி பெறுத பாடவகையில் அடுத்த இரண்டுமுறை பரீட்சைக்குத் தோற்றிப் பூரண சித்திபெறலாம்.

4. காலமும் இடமும்: இப்பரீட்சைகள் ஆவணி மாதத்தில் மட்டக்களப்பு, மானிப்பாய், யாழ்ப்பாணம் ஆகிய மூன்று இடங்களிலும் நிரந்தரமாக நடைபெறும். போதிய பரீட்சார்த்திகள் தோற்றும் வேறு இடங்களிலும் நடத்தப்படும்.

பரீட்சை நடைபெறும் இடமும் நேரசூசிகையும் பரீட்சை நடக்குந் தினத்துக்குப் பதினைந்து நாட்களுக்குமுன் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பப்படும். பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சை முடிந்து மூன்று மாதத்துக்குள் வெளியிடப்படும்

5. விண்ணப்பங்கள்: சித்திரை மாதம் 30 ந் திகதிக்குப் பிதாமகன் உரிய மாதிரித் தாளில் எழுதிய விண்ணப்பத்தைப்

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ். சைவபரிபாலனசபை நடத்தும் ... ...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பரீட்சைக் காரியதரிசி, சைவபரிபாலனசபை, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்குப் பதிவு செய்யப்பட்ட கடிதமூலம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்ப மாதிரித்தாள்கள் வேண்டுவோர் சபைக் காரியாலயத்தில் நேராகவும், பத்துச் சத முத்திரை யொட்டிய உறை யொன்று அனுப்பிக் கடித மூலமும் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப் பத்திரங்கள் பங்குனி மாதத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

6. பரீட்சைக் கட்டணம்: இளஞ் சைவப்புலவருக்கு 5 ரூபாவும், சைவப் புலவருக்கு 10 ரூபாவுமாகும். கட்டணப் பணம் மணியோடர் மூலம் அல்லது போஸ்றல்ஆடர்மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

7. பரீட்சைகளினின்றும் விலகுதல்: பரீட்சைக்கு விண்ணப்பம் அனுப்பியவர்கள் அவ் வருடப் பரீட்சைத் தினத்துக்குப் பதினைந்துநாட்களுக்கு முன்பு பதிவுத் தபால்மூலம் தோற்றாமையை அறிவித்து அடுத்த வருடம் அதே பரீட்சைக்கு இரண்டு ரூபா மட்டும் கொடுத்து உரியகாலத்தில் விண்ணப்பிக்கலாம், அடுத்த வருடத்துக்குரிய அனுமதிச்சீட்டு பரீட்சை முடிந்தபின் பரீட்சைச் சபைக் காரியதரிசியால் வழங்கப்படும். இவ்வுரிமை அடுத்த ஒருவருடத்துக்கே உரியது. பரீட்சைக் கட்டணம் எக்காரணம்பற்றியும் திருப்பிக் கொடுபடாது

8, பரிசுத் திட்டமும் பட்டம் அளிப்பும்

(அ) இப் பரீட்சைகள் ஒவ்வொன்றிலும் முதலாம் பிரிவில் முதலாவதாகச் சித்தியெய்துபவர்க்கு ஒரு தங்கப்பதக்கப் பரிசில் வழங்கப்படும்.

(ஆ) இப்பரிசில்களும் தகுதிப்பத்திரங்களும் இச் சபையினால் கூட்டப்படும் பட்டமளிப்பு விழாவில் வழங்கப்படும்.

9. இப் பரீட்சைகளிற் தேறுவோர் பாடசாலைகளிற் சைவ சமய பாடம் கற்பித்தற்கு விசேட உரித்துடையவராகக் கவனிக்கப்படுவார்.

10. இச்சபையினால், இப்பரீட்சைகளிலும் உயர்ந்த ''புலவர் மணி''ப் பட்டம் அளித்தற்கான பரீட்சைத் திட்டம் ஒன்று வகுக்கப்படுகிறது விரைவில் வெளிவரும்.

உத்தரவாதம்! உயரிய வேலை! நீடிய உழைப்பு!
சிறந்த அழகு! இவைகள் அனைத்தும் அமையப்பெற்ற
பவுண், வைர ஆபரணங்களுக்கு
சிறந்த இடம்:
எல். கே. எஸ்.
''தங்க மாளிகை''
கன்னாதிட்டி, :: யாழ்ப்பாணம்.
போன்: 281. தந்தி: ஜுவல்லர்ஸ்.

அடைவு நகை ஏல விற்பனவு

யாழ்ப்பாணம் 125, சிவன் கோவில் வடக்கு வீதியில் அடைவு பிடிக்கும் திரு. க. தம்பிப்பிள்ளை அவர்களிடம் 1-5-62 தொடக்கம் 30-11-62 வரைக்கும் வைத்த அடைவுகளில் மீட்கப்படாதவைகளை 1963ம் ஞு டிசம்பர் மீ 31உ (31-12-63) செவ்வாய்க் கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் மேற்படி அடைவு கடையில் வைத்துப் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
ஏலவிற்பனவாளர்,
Licensed Auctioneer & Valuer.
643 காங்கேசன்துறைவீதி
யாழ்ப்பாணம். 10-12-63.
M 237 13, 20-12-63

கோட்டு விற்பனவு விளம்பரம்

அளவெட்டி முருகேசர் கணவதிப்பிள்ளை —வழக்காளி.

எதிராக

மாகியப்பிட்டி சீனியர் அழகரட்டினம் —எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 4599ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக்காணிகளையும் 1964ம் ஆ மாசி மாதம் 1ம் திகதிசனிக்கிழமை(1-2-1964) முதற்காணி முற்பகல் 10 மணிக்கும் இரண்டாவது காணி மு ப 11 மணிக்கும் அக் காணிகளுள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபா 2608 க்கும் 6-2-62 தொடக்கம் 26 6-62 வரையும் ரூபா 1500 க்கும் 9 வீத வட்டியும் அதன்பின் கூடிய முழுத் தொகைக்கும் 5 வீத வட்டியும் கொடுக்கும் வரையும் இறுக்கவேண்டும். கோட்டுச் செலவு 191 ரூபா 87½ சதம், அதாவது எற்பட்ட செலவு ரூபா 128-85 சதம். வெளியாத்துச் செலவு ரூபா 38-07½ சதம்.

ஆதன டாப்புகள்

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி பண்டைத் தெருப்பு கோயிற்பற்று மாகியப்பிட்டி இறை ''உலக்கிசினவும், கோப்பாய் சினவும், நிர்சிங்காரயன் வளவும்'' என்னும் காணி நிலப்பரப்பு 15 இதில் தரவை உண்டான பயிரும், பனைமரங்களும், வடக்குப் பகுதியில் இருக்கும் கிணற்றில் 1/3 பங்கு கிணற்றுப்பங்கும், காணிக்கு வந்து பக்கத்தில் வழி வாய்க்காலும் உண்டு. எல்லை கிழக்கு கிறிஸ்ரிம்டமும், எதிராளியின் ஆதனமும், வடக்கு ரோட்டும் எதிராளியின் ஆதனமும், மேற்கு முருகர் ஆறுமுகமும் பங்காளரின் ஆதனமும், தெற்கு ஒழுங்கை.

2 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி மல்லாகம் கோயிற்பற்று அளவெட்டி இறை 'தீரை' எண்ணும் காணி நில. பரப்பு 20ம் 15 குளியும், எல்லை கிழக்கு காத்தியேசுவின் மனைவி தங்கம்மாவின் ஆதனமும், வடக்கு சுப்பர் சபாபதியும் மற்றவர்களும் மேற்கு சின்னத்தம்பி கைம்பெண் நாகதையினதும், சுப்பர் சின்னத்தம்பியினதும் பங்காளரினதும் ஆதனம், தெற்கு மாகியப்பிட்டி கிராமஎல்லையும், இவை அடங்கலிலும் பிரிக்கப்படாத ¼ பங்கு.

இ. கனகரெத்தினம்,
கொமிசனரும், விலைமதிப்பாளரும்
நம. 35, கொழும்புத்துறை வீதி
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்,

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்
வழ. இல. M.B, 2908

காரைநகர் பொன்னையா மயில்வாகனம் —வழக்காளி

எதிராக

யாழ்ப்பாணம் பிரதான வீதி
1. பேதுருப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை கைம்பெண் தோமாசியும்
2. கென்றி மரியாம்பிள்ளை மறுபெயர் பெரியதம்பியும் மனைவி
3. மார்கிறற்றும் —எதிராளிகள்:

இவ்வழக்கில் எனக்குக்கிடைத்த உத்தரவின்படி கீழ்காணும் ஆதனங்கள் 1964-ம்ஞு ஜனவரிமீ 25உ (25 - 1 - 64) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 5600-ம், மேலும் 5000 ரூபாவுக்கும் 1-7-59 திகதி தொடககம் 24-5-60 திகதி வரைக்கும் 24% வீத வட்டியும் அதன்பின் முழுத தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் வருடமொன்றுக்கு 5% வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 554-42 சதமும். இதில் ரூபா 5000/- குறைய இது ஏற்றுக் கொள்ளப்பட்டது.

காணிகள் விபரம்:

1. வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குழி கோயிற்பற்று கரையூரிறை ''அரசடியிலேயிட்ட முதலியார் வளவு'' குளிகள் 14, வீடும், மலகூடமும், செய்பயிர் வான்பயிர்களும், பிரதான வீதியிலிருந்து இக்காணிக்குப் போய்வர மூன்று அடி அகலமுள்ள பாதையுரித்தும், இதற்கு எல்லை கிழக்கும் வடக்கும் R. A. சந்திரசேகரானுதனம், மேற்கு இதில் பொன்னையாவினதும் உரிமைக்காரர்களினதும் காலஞ் சென்ற M. P சுவாம்பிள்ளையின் மனைவியின் உரிமைக்காரர்களினதுமாதனம். தெற்கு சொல்லப்பட்ட பாதை முகப்பும், ஆரிய லொட்ஸ் என அழைக்கப்படும காணிக்கும் ஆரியலொட்சுக்கும் செல்லும் பாதையும் இது முழுவதும்,

பதிவு D 266/70.

2. ஷை சுண்டிக்குளி கோயிற்பற்று யாழ்ப்பாணப் பட்டினப 3-ம் பிரிவில் சாப்பல் வீதியிலுள்ள காணித்தண்டு நிலப்பரப்பு 1 குளிகள் 10¼, சாப்பல் வீதி 35,37 39, இலக்க வரியிறை கொண்ட வீடுகளும், கிணறும், பயிர்களும், இது 18-4-49 ல் உத்தரவு பெற்ற அளவையாளர் M. அலோரியஸ் அவர்களால் தயாரிககப்பட்ட 1402-ம் இலக்க காணியின் படத்தில் மேற்குப் பகுதியிலுள்ளதும் 1-ம் கண்டமென கிந்தமாக்கி அடையாளமிடப்பட்டதுமான நிலப்பரப்பு 1 குளிகள் 10¼. இதற்கு எல்லை கிழககு M. M. A. பேக்கரினுதனம், வடககு J. ஆம்ஸ்ரோங்கினுதனம், மேற்கு திருமதி ஆம்ஸ்ரோங்கினுதனம், தெற்கு சாப்பல் வீதி. பதிவு D 265/223.

வி. செ. குட்டிப்பிள்ளை,
கொமிஷனர்.
Auctioneer & Valuer
643 காங்கேசன்துறை வீதி,
[illegible] 2-12-63.
M 240 20-12-63

கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M B 5254
காரைதீவு கிழக்கு
அம்பலவாணர் கனகசபை வழக்காளி.

எதிராக

காரைதீவு கிழக்கு
1. வேலுப்பிள்ளை நல்லதம்பியும் பெண் 2. சுந்தரம்மாவும் -எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 5254 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் 3 துண்டுக் காணிகளை 1964 ம் ஞு தை மீ 18 உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடககம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபா 4063-11ம் 29-11-62 தொடக்கம் 20-3-63 வரைக்கும் ரூபா 3500 க்கு 8 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 244-20ம் (ஏற்பட்ட செலவு ரூ 174-60 வெளியாத்துச்செலவு ரூ 44-40 ஏற்படக்கூடிய செலவு ரூ 25-20.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவு கோவிற்பற்று வலந்தலை ஆனல் காரைதீவு கிழக்கிறை 'ஒதிராப்பிட்டி' நில பர 24½ ஷை நில. பர 10 ஆக நில பர 34½ இதில் வடக்குப் பக்கமாகவும் கிழககுப் பக்கமாகவும் நில பர 15 நீககி மிகுதியில் வடக்குப் பக்கமாக ஒடுராப்பிட்டி' நில பர 4 நாலு பனைகள் வடலிகள் தென்னைகளும் எல்லைகிழக்கு வேலுப்பிள்ளை சுப்பிரமணியத்தினுதனம். வடக்கு வேலுப்பிள்ளை அருணசலத்தினுதனம். மேற்கு சின்னப்பு குமாரசாமியினுதனம். தெற்கு எதிராளிகளினுதனம். இதடங்கலும் ஆனல் இதன் கிழககெல்லைபாருகாக இதன் வடககெல்லைக் காணிக்கும் கிழக்கெல்லைக்காணிக்கும் போக்குவரவு செய்வதற்காக வண்டில் வழிப்பாதை பாவிப்புரித்து பிறநீங்கல், C 334/278இல் பதிவு செய்யப்பட்டது.

2. ஷை காரைதீவு ஆனல் மூன்னுறுதிப்படி களபூமி இறை 'உப்புக்கழி' நெற்பர 4½ நாலரை எல்லை கிழக்கு சங்கரப்பிள்ளை அம்பலவாணரின் ஆதனம். வடக்கு வாய்க்கால். மேற்கு ரோட்டு தெற்கு முத்தையா இராசையாவினுதனம். இதடங்கலும் C 28/147 இலும் C 334/282 லும் பதிவு செய்யப்பட்டது

3 ஷை இறை ''உப்புக்கழியும் 'ஒதிராப்பிட்டியும்' நில பர 24. இதில் அரசாங்கம் ரோட்டுக்கு எடுத்த நிலம் நீக்கி ஆட்சிப்படியுள்ள நில பர 24. இதில் தெற்குப் பக்கமாக அரைவாசி நில. பர 12 பன்னிரண்டு. எல்லை கிழக்கு ரோட்டு வடக்கு வேலுப்பிள்ளை அருணசலத்துக்குரிய இதன் மிகுதி அரைவாசிஆதனம். மேற்கு வெற்றிவேலு பெண் மீனாட்சியினுதனம். தெற்கு சின்னப்பு குமாரசாமியினுதனம். இதடங்கலும் C 334/279 இல் பதிவு செயயப்பட்டது.

அ. வெற்றிவேலு
கொமிஷனர்.
19, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம், 15-12-63.
M 243 20-12-63

தெய்வ ஒளி

மலைமகளே! சூரியன் ஆயிரக் கணக்கான கிரணங்களைக் கொண்டு திக்குகள் எங்கும் பிரகாசமடையும்படி செய்கிறார். ஆனால் என் மனதுள்ளே இருக்கும் இருட்டைப் போக்க சூரியனால் முடியாது. உமது கோமளகரமான பாதங்களால் ஆன்மாக்களுக்கு புறம்பும் உள்ளும் இருளை அகற்றி ஆட்கொள்ளுகிறீர்.

-நாராயண பட்டோத்திரி

கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M.B. 4835
ஆறுமுகம் வேலுப்பிள்ளை
சாந்தன் புளியடி,
காரைநகர் வடக்கு - காரைநகர் —வழக்காளி

எதிராக

1 சிவக்கொழுந்து தில்லையம்பலமும் மனைவி
2 தங்கம்மாவும் — திருநெல்வேலி, தற்பொழுது கோப்பாய் —எதிரிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டு M B. 4835-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும காணி 1964-ம் ஆண்டு தைமாதம் 18-ம் திகதி சனிக்கிழமை முற்பகல் அந்தக காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- ரூபா 9889-ம் 21 - 5 - 62 தொடக்கம் 24-1-63வரையில் ரூபா 8000-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் பணம் முற்றாக இறுபடும் வரையில் முழுத்தொகைக்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 301/84-ம்.

ஆதனடாப்பு:-

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்கு கோப்பாய் கோவில்பற்று கோப்பாய் தெற்கிறை ''முக்குவிச்சிப் புலம் கொங்கானம்'' நில. பர. 23. இதில் கிழக்குப்புறமாக கிந்தமாக 10 பரப்பும், வீடும, பயிர்களும், அதைச் சேர்ந்தவைகளும், கிணறும். இதற்கு எல்லை கிழககு பரமநாதர் கந்தையாவும் ஒழுங்கையும், வடக்கு ஒழுங்கை, மேற்கு இக்காணியின் மிகுதியாயுள்ள சுப்பிரமணியம் பாலசந்திரனின் மனைவி தேவாம்பிகையின் காணி, தெற்கு ஒழுங்கை.

முற்பதிவு:- K 215/263.

க. செல்வத்துரை,
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
முருகன் இல்லம்,
இணுவில், 17-12-63.
M 241. 20-12-63.

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டிலே

புங்குடுதீவு
சின்னத்தம்பி கந்தையா —வழக்காளி

இல. M.B. 4287

எதிராக

புங்குடுதீவு, 8-ம் வட்டாரம்
ஜயம்பிள்ளை கதிரேசு கைம்பெண் ஆச்சிமுத்து —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 4287-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி கீழ்காணும் மூன்று துண்டுக்காணிகள் 1964-ம் ஆ ஜனவரிமீ 18உ சனிககிழமை (18-1-64) முற்பகல் 10 மணி தொடக்கம் அவ்வக்காணிகளுக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 675-ம். இன்னும் ரூபா 350-க்கு 27-9-61 தொடக்கம் 20-2-62 வரையும் 18 வீத வட்டியும் கூடிய தொகைக்கு 20-2-62 தொடககம் இறுக்கும் வரையும் 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 121-65-ம்.

காணிகளின் விபரம்:

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி புங்குடுதீவுக் கோவிற்பற்று, புங்குடுதீவு கிழக்கிறை ''வீரப்பன் தாழ்வுக்குக் கிழக்கு'' நில. பர. (7) ஏழும் வான்பயிர்களும். இதற்கு எல்லை கிழக்கு தரவை, வடக்கு நாகன் மாதனுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், மேற்கு ஆறுமுகம் பெண் அன்னப்பிள்ளையினுதனம். தெற்கு வேலுப்பிள்ளை சபாபதியினுதனம். இதடங்கலும்.

2. ஷையிறை ''மரியானுக்கு வடக்கு' நில. பர. (18⅜) பதினெட்டுடன் எட்டில் மூன்றும், வான்பயிர்களும், வீடும். இதற்கெல்லை கிழககு தரவை, வடக்கு முருகேசு பெண் சின்னத்தங்கத்தினுதனம், மேற்கு ஆறுமுகம் கைம்பெண் பொன்னிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், தெற்கு குழந்தை வல்லிபுரத்துக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், இதடங்கலிற் சொரியலாய் நில. பர. (4 3/16) நாலே அரைக்காலும் அதற்குரியவைகளும்.

3. ஷையிறை ''இத்தியடியிற் புலதிலகம்'' நில பர 40. இதற்கெல்லை கிழக்கு பிள்ளையார் கோயிலுக்குரிய ஆதனம், வடக்கு கழிவு நிலம், மேற்கு குளமும் சடையன் பெண் சின்னத்தங்கத்தினுதனமும், தெற்கு கந்தையா பெண் செல்லமுத்துவினுதனம். இதடங்கலிற் சொரியலாய் நில. பர (4½) நாலரையுமதற்குரியவைகளும்,

செ. இரத்தினசபாபதி,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
ஸ்ரேசன் ரோட்,
கோண்டாவில் மேற்கு
கோண்டாவில், 18-12-63.
M. 239 20-12-63,

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இவ்வாரம் 22-12-63 — 28-12-63

உங்கள் பலன்?

[ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது]

மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

தம்பி தங்கையர், அந்நிய ரயலவர் உதவியும், பொருள் நன்மையும், நிம்மதியினமும் உண்டாகும்.

இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசிரிடம், 1, 2-ம் பாதம்.

நிம்மதியினம், சுகவீனம் அலுவலகத்தில் சச்சரவு, பணநன்மை எதிரிகளுக்கு இடையூறுண்டாம்.

மிதுனராசி மிருகசிரிடம், 2 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், 2ம் பாதம்.

சூடும்பநிலைமையில்திருப்தியின்மை, மாறுத தவருன விளக்கங்களும் சச்சரவுகளும், புதுமுயற்சிகளில் தடங்கலும் வெற்றியும், சிறு பிரயாணங்களும் உண்டாம்.

கடகராசி புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்.

எதிர்ப்புக்களைத் தாண்டி விடுவீர். பண இலாபமும் புதுமுயற்சிகளில் வெற்றியும் உண்டாம். ஞாயிறு திங்கள்காலை எச்சரிக்கை. குடும்பக் கவலைகளுக்கிடமுண்டு

சிங்கராசி மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

வயிற்றுக்கோளாறு, நிம்மதியினம், செலவுஅதிகரித்தல், தூற்றித்திரிவோர்தொல்லைஉண்டாம். திங்கள் மாலை, செவ்வாய் புதன் எச்சரிக்கை.

கன்னிராசி உத்தரம் 2, 3, 4 பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

இனத்தவருடன் மோதல், சுகவீனம், பணநன்மை, சமூகவெற்றி உண்டாம். புதன் வியாழன் வெள்ளி எச்சரிக்கை.

துலாம், சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

நிலபுலத்தால் இலாபம் இளைய சகோதரர் உதவி, எண்ணங்களுக்குத் தடை, தந்தையார்க்குச் சுகவீனம் உண்டாம். வெள்ளி மாலை சனி எச்சரிக்கை.

விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

சண்டைகளில் முந்தி நிற்றல். கண்ணோய்கள், தொழில் நன்மை, பண இலாபம் உண்டாம்.

தனுராசி மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

எண்ணங்களுக்குத் தடை, சுகவீனம், உணர்ச்சியுந்தற்கலகங்கள், டணமளவில் ஓரளவு நன்மை என்பன உண்டாம்.

மகராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

அதிக செலவு, நண்பர்களாற் காட்டிக் கொடுக்கப்படல், சிந்தனையில் முடிவுகாணமுடியாமை எதிரிகளுக்கு இடையூறு என்பன உண்டாம்,

கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்.

நன்மைகள், பண இலாபம் நிச்சயம். எண்ணியபடி எளிதாய் நடத்தல், சிறு சுகவீனங்கள் உண்டாம்.

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

பணமளவில் சற்று நன்மையும் புதுமுயற்சிகளில் தடங்கலும், வெற்றியும், அயலவரால் இலாபமும், விவசாய வருவாயும் உண்டாம்.

சகஸ்ர சங்காபிடேகம்

வேம்டில் ஆதீனம் சிவஸ்ரீ. சபாலசுந்தரக்குருக்கள் அவர்களின் ஆத்மா சாந்தி அடையும் பொருட்டு, சென்ற புதன்கிழமை ஊரெழுப்பிள்ளையார் கோவிலில் அஷ்டோத்திர சகஸ்ர சங்காபிஷேகம் நடைபெற்றது. அவர் தம் மகன் வைத்தியநாதக்குருக்கள் அவர்களின் வேண்டுகோளின்படி சிவஸ்ரீ. சோமசுந்தரக்குருக்கள் அவர்கள் ஆகம நெறி தவருது நடாத்தி வைத்தார்- கிரியைகள் தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெற்றன.

மார்கழி வழிபாடு நல்லூர் பஜனைச் சபை

16-12-63 காலை 4 மணியளவில் நல்லூர் தேவஸ்தான முன்றலில் மேற்படி சபையினரால் பஜனை கிகழ்த்தப்பட்டுப் பின்னர் 4-30 மணியளவில் வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வர தேவஸ்தானதகிலும், தமிழிசைச்சங்கத்துடன் இணைந்து வீதிவலம்வந்து கன்னுதிட்டிவீதி, மணிக்கூட்டு வீதி, நாவலர் வீதி, பருத்தித்துறை வீதி, கோயில் வீதி வழியாக வந்து நல்லூர் தேவஸ்தான வீதிகளிலும் காலை 7-30 மணிவரை பஜனை செய்தது

மார்கழிமீ முழுவதும் நல்லூர் தேவஸ்தான சுற்றுடல் வீதிகளிலும், இன்றுமுதல் பஜனை நடைபெறும்,

திருக்கேதீச்சரத்தில்

1-ம் பக்கத் தொடர்ச்சி

தாமே ஏற்றுக்கொள்ளுதல் வண்டும்.

ஆசிரியர்கள் இப்பணியில் கூடிய சிரத்தை எடுக்குமாறும், சிரமதான இயக்கத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் கூடிய விரைவில் (18-12-63 க்குமுன்) தம்முடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்றும் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம், நல்லூர் பருத்தித்துறை வீதி, இல. 278.
யாழ்ப்பாணம்
கிறீஸ்தவர் சேமநிதிச் சங்கம் லிமிட்டெட்
—வழக்காளி.

இல. M.B. 4661

எதிராக

யாழ்ப்பாணம், மதியூஸ் வீதி, இல. 70/20.
1. கபிரியல் டேவிட் அல்லது அல்பேட்
2 பெண் அன்னம்மா
—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M.B. 4661-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக காணியை 1964-ம் ஆண்டு ஜனவரி (தை) மாதம் 18-ம் திகதி (18-1-64) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் கின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபாய் 4475-ம். இதில் ரூபாய் 3000-க்கு 1-3-62 திகதி தொடக்கம் 20-7-62 திகதி வரைக்கும் 100-க்கு 10 வீத வட்டியும், பின் திகதிதொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும்வரைகுகும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 231/35 சதம். இதில் வட்டியில் ரூபா 950-ம் கோட்டுச் செலவில் ரூபா 125-ம் இறுபட்டது.

காணியின் விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று சுண்டிக்குளியிறை "கற்குளம் வயலும் இலகடியும் குளந்தை வயலும்" கிலப்பரப்பு 3-ம் குளி 10 3/10-ம், ஆகு யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 197-ம் இலக்க வழக்கில் அணைத்திருக்கும் படத்தில் 5-ம் துண்டாகவும் கல்வீடும் கிணறும் மற்றும் பயிர்களும். எல்லை கிழக்கு குறித்த படத்தில் 6-ம் துண்டு ஏ. டீ. மாஸ்டனின் பெண்ணின் ஆதனம், வடக்கு குறித்த படத்தில் 7-ம் துண்டு ஸ்டீபின் அல்பொன்சின் ஆதனம். மேற்கு குறித்த படத்தில் 4-ம் துண்டு கபரியல் சின்னத்தம்பியின் ஆதனம், தெற்கு குறித்த படத்தில் 5-A துண்டு பாதை. இதடக்கலும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை,
Commissioner & Valuer,
Licensed Auctioneer.
தெல்லிப்பழை. 1-11-1963.
M. 244 20-12-63.

சமயப் பணி தலைமேற் கொண்ட சபை

ஸ்ரீ. கற்பகவிநாயகராலயம், (சாந்தையர் மடம்) கூட்டுப் பிரார்த்தனைச்சபை, 4-வது வருடாந்தக்கூட்டம் 1-1-2-63 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியளவில் சைவப்புலவர் திரு. வ. கந்தசாமி அவர்கள் தலைமையில் ஆரம்பமாயது. இச்சபை இவ்வருடத்தில் சைவசமய நூல் நிலையம் ஒன்றை நிறுவியதுடன் ஞாயிறுதோறும் திருமுறை வகுப்பும், வெள்ளிதோறும் கூட்டு வழிபாடும், விசேட உற்சவ காலங்களில் சைவ சமயப் பிரசங்கமும் நடாத்தி வருகிறது.

பின்வரும் பிரேரணைகள் சபையோரால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன: திருவெம்பாவைக்காலத்தில் வீதி தோறு பஜனை செய்தல், திருவாதவூர் புராணம் படித்துப் பயன் சொல்லல், சமய அறிவுப் போட்டி திருமுறைப் போட்டி நடாத்துதல், திருமுறைகள் சிலவற்றைத் தொகுத்து அச்சிட்டு இலவசமாக வெளியிடல், தைமாதம் ஆண்டு விழாவும், பரிசளிட்பு விழாவும் நடாத்தல்.

புதுவருட உத்தியோகத்தர்களாக, திருவாளர்கள் போஷகர் எஸ். பி. தில்லைராஜா, ரி. என். இரகுநாதன் தலைவர்: மு க. இரத்தினவேல், (உபதலைவர்கள்) ஆர் வி. சுப்பையாச் செட்டியார், செ சபாபதிப்பிள்ளை, செ. கனகசபை, ச. தியாகராசா. (செயலாளர்) வ. கந்தசாமி, (கௌரவ தனுதிகாரி) ம. சுப்பிரமணியம்ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

அ. இ. பொ. சேவைச் சபையினரின் பாத யாத்திரை

—o—

மார்கழி மீ 10-ம் திகதி (25 - 12 - 63) புதன்கிழமை இரவு 8 மணியளவில் நல்லூர்த் தேவஸ்தான வீதியிலிருந்து பொன்னுலை ஸ்ரீ. வரதராஜப் பெருமாள் கோவில் ரதோற்சவத்திற்கலந்து கொள்ளும்பொருட்டு அ. இ. பொ. சேவைச் சபையினர் பாத யாத்திரையாக, ஐயனர் கோவிலடி வீதியாக, நல்லூர் அரசடிவீதி, ஆனைக்கோட்டை, மானிப்பாய், சண்டிலிப்பாய், சிரணி நாகபூமாள் கோவில், சங்காணை, சித்தங்கேணி, சுழிபுரம், மூளாய், பன்னுலை ஆதியாம் பிரதான வீதி வழியே இரவு பூராவும் பஜனைப் பாத யாத்திரை நிகழ்த்துவர்.

சைவாபிமானிகள் யாவரையும் மேற்படி வைபவங்களிற் பற்குபற்றி அவனருளை எய்தும் வண்ணம் வேண்டிக் கொள்ளப்படுகின்றனர்.

—o—

இந்திய அறிஞர்களும் ஈழத்து அறிஞர்களும்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

12-05--12-50 குருலிங்க சங்கமம்
திரு. மு. வைத்தியலிங்கம் அவர்கள்
தலைவர் குறிப்புரை

பிற்பகல்

3-00—3-45 சேக்கிழார்கண்ட திருநாவுக்கரசர்
வித்துவான் பண்டிதர் சைவப்புலவர்
க. வேந்தனார் அவர்கள்
தமிழ் விரிவுரையாளர் பரமேசுவரக்கல்லூரி

3-45—4-30 சைவசித்தாந்தத்தின் மாண்பு
திரு. வே. நாகலிங்கம் J. P. அவர்கள்

4-30—5-15 மெய்கண்டாரும் சிவஞான முனிவரும்
சித்தாந்த அறிஞர் வே. சோமசுந்தரம்
அவர்கள்

5-15—6-00 'சமயவாழ்வு வேண்டுமா?'
தலைவர் அவர்கள்

6-00—6-15 தலைவர் குறிப்புரை
தமிழ்மறையோதல் கடவுள் வழிபாடு

சோபகிருது வரு மார்கழி மீ 26 ஆ
(25—12—63) புதன்கிழமை

தலைவர்
புலவர் திருமதி. சி. குழந்தையம்மாள் M. L. A.
அவர்கள்

9-30—9-40 கடவுளாராதனை திருவெம்பாவை யோதல்

9-40—10-25 அப்பர் தேவாரத்தில் உவமை நயம்
புலவர் ஸ்ரீமதி சி. குழந்தையம்மாள்
அவர்கள் M. L. A

10-25—11-10 சுந்தரர் செந்தமிழ்
செல்வி பண்டிதை த அப்பாக்குட்டி அவர்கள்

11-10—11-20 தமிழ்மறையோதல்

11-20—12-05 அடியார் பெருமை
பண்டிதை ஸ்ரீமதி து. சத்தியதேவி அவர்கள்

பிற்பகல் தலைவர்
திரு. த. முத்துச்சாமிப்பிள்ளை அவர்கள்
யாழ். சைவபரிபாலனசபைத் தலைவர்

3-00—3-20 தலைவர் முன்னுரை
3-20—4-05 அறம்
பண்டிதர் இ. நமசிவாயம் அவர்கள்
4-05—4-10 தமிழ்மறையோதல்
4-10—4-55 பெரியபுராணம்
பண்டிதர் வித்துவான் இ. திருநாவுக்கரசு
அவர்கள்

4-55—6-00 தேவார, உபந்நியாச, புராணபடனப் போட்டிகளில் சித்தியடைந்த மாணவ மாணவிகளுக்குப் பரிசில்கள், இந்துசாதனம் நடத்திய நாவலர் கட்டுரைப் போட்டிப் பரிசில்கள் வழங்குதல்.

தீர்மானங்கள்:

யாழ்ப்பாணம்

ஐக்கிய இலாப நிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சகிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட கேமப் பணம்

கேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகித மூமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணர்பண்ணை கங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில் யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 20-12-1963 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர்: நம. சிவப்பிரகாசம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org